


11வது ஞானச்சாரியார்

# 12வது ஞானச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

## அவர்களின் எழுத்துக்கள்





12வது ஞானச்சாரியார்

**மார்கழி மாத வெளியீடு**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112**

***உள்ளுறைத் தலைப்புக்கள்:***

## I. ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

## "தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"

கட்டுரையின் கடைசிப் பகுதி

- அரசியலில் மிகப்பெரிய மாற்றங்கள் தேவை!
- அன்னிய நாகரீக மோகத்தினால் அன்னியரிடம் அடிமையாதல்:
- இந்துவேத அறிவும், இந்துமத அறிவும் அனைவருக்கும் தேவை!
- நாட்டின் இணைப்புச் சத்தி அந்நாட்டிற்குரிய வேதமும், வேதமதமும்தான்!

## II. சித்தர்களும் அவர்கள் தொடர்பான கருவறைகளும் - பதினெண்சித்தர்கள் பற்றிய விளக்கக் கட்டுரை

(குருதேவரால் எழுதப்பட்ட கட்டுரை - எந்த ஆண்டில் என்பது தெரியவில்லை)

## III. தமிழுக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்?

(குருதேவரால் எழுதப்பட்ட கட்டுரை - எந்த ஆண்டில் என்பது தெரியவில்லை)

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

# “தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்”

**கட்டுரையின் கடைசிப் பகுதி**

(முந்தைய இதழின் தொடர்ச்சி ...)

## அரசியலில் மிகப்பெரிய மாற்றங்கள் தேவை!

12) II (அ) நாம் குறிப்பிடுகின்ற மூன்று வகையான விடுதலைப் போராட்டங்களுக்கும், போர்களுக்கும், போரின் வெற்றிக்கும்.... காரணமாக, செயல்வடிவமாக, பாதிக்கப் படக் கூடிய பொருள்களாக, பாதிக்கப்படக் கூடிய நபர்களாக, பயனடையக் கூடிய நபர்களாக இருப்பவர்கள் அனைவருமே இந்துக்கள்தான், இந்துக்கள்தான், இந்துக்கள்தான். எனவே, இந்துக்களின் தனி மனித வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுவது போல், இந்துக்களின் சமுதாய அமைப்பிலும், நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களிலும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளிலும், கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும் மாற்றங்கள் உருவாக்கப் பட்டாக வேண்டும், உருவாக்கப் பட்டாக வேண்டும், உருவாக்கப் பட்டாக வேண்டும், உருவாக்கப் பட்டேயாக வேண்டும். அதற்கு இந்த இந்திய நாட்டின் அரசியலிலே மாற்றம் பெற்றதாக்கப்பட வேண்டும். அதாவது, இந்திய அரசாங்கம் என்ற நிறுவன நிர்வாகக் கூட்டமைப்பின் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், கோட்பாடுகளும், அடிப்படை நெறிமுறைகளும் உருவாக்கி வைத்திருக்கின்ற மாயைகளும், மாயாவாதக் கற்பனைகளும், தன்னல வெறியர்களின் தவறான கொள்கைகளும் தகர்த்தெறியப்பட வேண்டும், தவிடு பொடியாக்கப்பட வேண்டும். தகர்த்தெறியப்பட வேண்டும், தவிடுபொடியாக்கப் படவேண்டும், தகர்த்தெறியப்பட வேண்டும், தவிடுபொடியாக்கப் படவேண்டும். தவிடுபொடியாக்கப் பட்டேயாக வேண்டும். அப்படியோர் அரசியல் மாற்றம் ஏற்பட்டுப் புதிய அரசியலும், அரசும் தோற்றம் பெறவேண்டும். அப்பொழுதுதான் முப்பெரும் விடுதலைப் போராட்டங்களும், போர்களும் மாபெரும் வெற்றியினைப் பெறமுடியும், பெறமுடியும், பெறமுடியும்.

(ஆ) அதாவது, தனிமனித வாழ்வில் மாற்றம், சமுதாய வாழ்வில் மாற்றம், இருவகை வாழ்க்கைக்கும் உரிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளிலும், கோட்பாடுகளிலும் மாற்றம் என்று பல்வேறு வகையான மாற்றங்களை உண்டாக்குவதற்கு அரசிலும், அரசியலிலும் மிகப் பெரிய மாற்றங்கள் தேவை என்ற கருத்து பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியம், அரசபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் என்ற மூன்று நூல்களிலும் மிகத் தெளிவாகவே வற்புறுத்தப் படுகிறது. இதே கருத்துத்தான் இருக்கு வேதத்தில் மிகத் தெளிவாகவும், நேரடியாகவும் வற்புறுத்தப் படுகிறது. இந்துமதத்துக்குரிய முப்பத்தாறு நூல்களிலும் மேற்படிக் கருத்தோட்டம்தான் காணப்படுகிறது. அதாவது, பதினெண்சித்தர்கள் அரசியலிலும் அறிவியலிலும் மாற்றங்களைச் செய்தால் அது மற்ற துறைகளைச் சார்ந்த வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும், இயக்கத்திலும் வடிவமைப்பிலும் மாற்றங்களைக் கொண்டு வரும், கொண்டு வரும், கொண்டு வரும். கொண்டு வந்தே தீரும் என்று கூறுகிறது. ஏனென்றால், அரசாங்கம் எல்லா வகையான அதிகாரங்களையும் பெற்றிருப்பதால் அதன்மூலம் மிக எளிதாக குறுகிய கால அளவுக்குள் எல்லாத் துறைகளிலும், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் தேவையான மாற்றங்களைப் போதுமான அளவு கொண்டு வர முடியும்! கொண்டு வரமுடியும்! கொண்டு வரமுடியும்!.

(இ) மேலும் அரசாங்கத்திடமும், அதன் நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களிடத்திலும் எல்லாத் துறையிலும் வாழுகின்ற மனிதர்களையும் மாற்றும் சமுதாய அமைப்புக்களையும், இயக்கங்களையும் இயக்கச் சத்திகளையும் கட்டுப்படுத்தி மட்டுப்படுத்தி வைக்கும்

அதிகாரம் இருக்கின்றது. ஆனல், அதிகாரத்தில் இருப்பவரே... செங்கோல் பிடிப்பவரே, அரசாங்கத் தலைவர்களே, அரசியல் வாதிகளே.... இந்துவேதக் கண்ணோட்டத்திலும், இந்துமதக் கண்ணோட்டத்திலும் சிந்திக்க விரும்பவில்லை என்ருல், விரும்பவில்லை என்ருல், விரும்பவில்லை என்ருல் தேசியக் கண்ணோட்டத்திலும் சிந்திக்க விரும்பவில்லை என்ருல், பொதுமக்களிடமிருந்து இந்துவேத நம்பிக்கையையும், இந்துமதப் பண்பாட்டுப் பிடிப்பையும், நாகரீகப் பிடிப்பையும், இந்துக்களின் முன்னோர்கள் வகுத்தளித்துச் சென்றுள்ள வாழ்வியல் மதிப்பீட்டையும் வாழ்வியல்களையும், மரபுகளையும், ஒழுகலாறுகளையும் மக்கள் எப்படி அளப்பரிய ஆர்வத்தோடும், ஈடுபாட்டோடும் ஏற்றுக் கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிருர்கள். இப்படி இந்துமத மூலவர்களாகவும் காவலர்களாகவும் இருக்கின்ற பதினெண்சித்தர்களே இந்துவேதத்தின் விடுதலை வாழ்வுக்காகவும், இந்துமதத்தின் விடுதலை வாழ்வுக்காகவும் அரசின் அமைப்பிலும் அரசாங்கத்தின் இயக்கத்திலும் மிகப்பெரிய மாற்றம் தேவை என்று கூறுகின்ற தத்துவத்தை, செயல் சித்தாந்தத்தை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும், எண்ணிப் பார்க்க வேண்டும், எண்ணிப் பார்க்க வேண்டும், எண்ணிப் பார்த்தேயாக வேண்டும்.

(ஈ) இப்படி வெட்ட வெளிச்சமாக, நேரடியாக “இன்றைய அரசாங்க அமைப்புக்களிலும், அரசாங்க நடைமுறைகளிலும், அரசாங்க சட்டதிட்டங்களிலும், அரசாங்கக் கொள்கைகளிலும், அரசியல் தத்துவங்களிலும், இன்றைய அரசின் செயல் சித்தாந்தங்களிலும் மிகப் பெரிய மாற்றங்கள் தேவை! மிகப்பெரிய மாற்றங்கள் தேவை! மிகப்பெரிய மாற்றங்கள் தேவை. அப்பொழுதுதான் இந்துவேதம் தழைக்கும்! இந்துமதம் பிழைக்கும், இந்துக்கள் ஆட்சிமாட்சி பெறுவார்கள்” என்று மேலே குறிப்பிட்டுள்ள கருத்தை எல்லோருமே நீள நினைத்து ஆழச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதாவது இந்திய விடுதலை உருவான அவசரத்தில் இந்திய அரசின் வடிவமைப்பும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், கோட்பாடுகளும், கொள்கைகளும், குறிக்கோள்களும், நடைமுறைகளும் ஏனோதானோவென்று அவசியத்தின் காரணமாக, அவசர அவசரமாக உருவாகி விட்டன. அல்லது உருவாக்கப் பட்டுவிட்டன. எனவே, இவை பற்றி மறுசிந்தனை செய்ய! மறு சிந்தனை செய்ய! மறுசிந்தனை செய்ய! .... விரிவான ஆராய்ச்சிகளைச் செய்ய, விரிவான ஆராய்ச்சிகளைச் செய்ய, விரிவான ஆராய்ச்சிகளைச் செய்ய, புதிய புதிய பரிசீலனைகளைச் செய்ய, புதிய புதிய பரிசீலனைகளைச் செய்ய, புதிய புதிய பரிசீலனைகளைச் செய்ய நம்மவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டாக வேண்டும், நம்மவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டாக வேண்டும், நம்மவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

(உ) ஏனென்ருல், ஆட்சியின் வேர், அரசியல் தலைவர்கள், அரசியல் இயக்கங்கள், கழகங்கள், கட்சிகள்.... அந்த வேர்களே, குற்றங்களாலும், ஏமாற்றுக்களாலும், மோசடிகளாலும், தன்னல வெறிகளாலும், பேராசைகளாலும், பதவி மோகங்களாலும், அதிகார ஆசைகளாலும், தவருன செயல்களாலும்.... பீடிக்கப் பட்டுவிட்டன என்கின்ற போது இந்த வேர்களுக்குரிய மரமான அரசாங்கம் எப்படி எல்லோருக்கும் நீதியை வழங்க முடியும், நன்மையைச் செய்ய முடியும், உண்மையை வாழவைக்க முடியும், குற்றங் குறைகளுக்கு அப்பாற்பட்டு நிற்க முடியும்???!!!..... என்று பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மிகத் தெளிவான அரசியல் சிந்தனையை அவர்களின் அரசியல் பாரம்பரியம், குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் என்ற நூல்களில் அருளி யுள்ளார்கள். இந்தப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் முப்பெரும் நூல்களின் சிந்தனைப்படி இன்றுள்ள நம் நாட்டு அரசியலை அணுகிப் பார்த்தால்!? அறிவுப் பூர்வமாக ஆராய்ந்து பார்த்தால்?! நாம் என்ன செய்ய

வேண்டும் அல்லது என்ன சொல்ல வேண்டும் அல்லது நாம் எப்படி வழிகாட்ட வேண்டும்?! என்பன புரிந்திடும்! புரிந்திடும்!! புரிந்திடும்!!!... ஆனுல், ஆனுல், ஆனுல் நமக்குப் புரிந்ததைப் பிறர்க்குத் தெரிவிப்பது எப்போது? எப்படி? பிறருக்குத் தெரிவிப்பது எப்போது? எப்படி? பிறர்க்குத் தெரிவிப்பது எப்போது? எப்படி?

இந்த நாட்டிலுள்ள மதத் தலைவர்களும், மத நிறுவன நிர்வாகங்களும் என்றைக்கு பத்தர்கள், பத்தியாளர்கள், மத நம்பிக்கையாளர்கள் தங்களுடைய மூதாதையரின் வழிவழியான பாரம்பரியத்தை, மதிப்பு மிக்க வாழ்வியல் வெளிப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் வெற்றி பெறுகிறுர்களோ; அன்றைக்குத்தான் இந்துவேத விடுதலை, இந்துமத விடுதலை, இந்துக்களுக்கு விடுதலை என்ற கொள்கையும், குறிக்கோளும் நிறைவு பெறும், நிறைவு பெறும், நிறைவு பெறும் என்ற உணர்வில், எண்ணத்தில் கருத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறுர்கள். ஆனுல், இந்து மதத் தலைவர்களோ, மடாதிபதிகளோ, பீடாதிபதிகளோ மதத் தொடர்பாக உள்ள நிறுவன நிர்வாகங்களின் தலைவராக விளங்குபவர்களோ நம் இந்துக்களை அணுகி எந்த ஓர் அறிவுரையையோ, கருத்து விளக்கத்தையோ, புதிய செயல் திட்டத்தையோ விளக்கி உரைக்கத் தயாராக இல்லை. அதாவது நம் இந்துமதத்துக்குரிய அனைத்து வகைப்பட்ட தலைவர்களும், மடாதிபதிகளும், பீடாதிபதிகளும் மாற்று மதத்தவரை சந்திக்கவோ, நம் மதத்தவரை சிந்திக்கச் செய்யவோ எந்த ஒரு முயற்சியும் செய்யாது ஏனேதானேவென்று அமைதியாக, அடக்கமாக தங்கள் தங்கள் விருப்பம்போல் செயல்பட்டுக் கொண்டே யிருக்கிறுர்கள், செயல்பட்டுக் கொண்டே யிருக்கிறுர்கள், செயல்பட்டுக் கொண்டே யிருக்கிறுர்கள்.

நம் மதத்தைப் பொறுத்தவரை மதத் தலைவர்களுக்கிடையேயோ, மதநிறுவன நிர்வாகத் தலைவர்களுக்கிடையேயோ மதத்தில் அளப்பரிய அக்கரையும், ஆழ்ந்த ஈடுபாடும் உடைய மதவாதிகளுக்கிடையேயோ.... நெடுங்காலமாக எந்தவிதமான பொது சந்திப்புக்களோ, கூட்டங்களோ, கூட்டு முயற்சிகளோ, கூட்டு சிந்தனை ஆய்வுகளோ.... நிகழ்ந்ததில்லை, நிகழ்ந்ததில்லை, நிகழ்ந்ததில்லை, நிகழ்த்தப்பட வில்லை, நிகழ்த்தப்பட வில்லை, நிகழ்த்தப்பட வில்லை. இப்பொழுதாவது இனியாவது அப்படி நிகழுமென்ற நம்பிக்கையில்லை, நம்பிக்கையில்லை, நம்பிக்கையில்லை. எனவே, நம் இந்துமதத்தைப் பொறுத்தவரை மதத் தலைவர்களும், மத நிறுவன நிர்வாகத் தலைவர்களும், மத வாழ்வில் பற்றும் பாசமும் நம்பிக்கையுமுடையவர்கள் மிக விரிவாக ஒரே இடத்தில், அல்லது ஒரே நிகழ்ச்சியில் சந்தித்துக் கூடிப்பேசி சிந்தித்திடக் கூடிய நல்ல பயன்மிகு சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும், உருவாக்கியேயாக வேண்டும். அதற்காக நமது அரசாங்கத்திலும், அரசியல்வாதிகளிடத்திலும், அரசியல் கட்சி, கழகம், இயக்கம் முதலியவற்றிடத்திலும் மிகப்பெரிய புரட்சி நிறை மாற்றங்களை உருவாக்க வேண்டும்! புரட்சி நிறை மாற்றங்களை உருவாக்க வேண்டும்! புரட்சி நிறை மாற்றங்களை உருவாக்க வேண்டும்! உருவாக்கியேயாக வேண்டும். இதற்காகத்தான் செயல்பட்டிருக்கிறுர், செயல்படப் புறப்பட்டிருக்கிறுர் இன்றைய இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர் அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார்.

(ஏ) இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் தத்தமது கடமைகளை, பொறுப்புக்களை வெற்றிகரமாகச் சரிவர நிருவகிக்கும் போதுதான் இந்நாட்டுக்குரிய பழம்பெரும் இந்துவேதமும், இந்துவேத மதமான இந்துமதமும், இந்து மதத்துக்குரிய இந்துக்களும் பயனடைவார்கள். நன்மையடைவார்கள். விடுதலைக் காற்றைச் சுவாசிப்பார்கள். தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் தலைநிமிர்ந்து நடப்பார்கள். இந்த நாட்டில் வளர்ந்து வருகின்ற இளைஞர்கள் ஒவ்வொருவரும் எப்போது இந்துவேத விடுதலைக்காகவும், இந்துமத விடுதலைக்காகவும்,

இந்துக்களின் விடுதலைக்காகவும் எடுத்துக் கொள்கின்ற முயற்சிகளிலும், பெறுகின்ற பயிற்சிகளிலும் மாபெரும் வெற்றி வீரர்களாகிறார்களோ, அப்பொழுதுதான் இந்த நாட்டின் அரசியல் நிறுவன நிர்வாகங்களும், சமுதாய நிறுவன நிர்வாகங்களும் உண்மையிலேயே தேவையான சாதனைகளைச் சாதித்திருக்கிறார்கள் என்ற பேருண்மையையும், பாராட்டையும் பெறமுடியும்! பெறமுடியும்! பெறமுடியும்!

## அன்னிய நாகரீக மோகத்தினால் அன்னியரிடம் அடிமையாதல்:

12 III (அ) இந்த நாட்டின் கல்வித் துறையினரும், கலைத்துறையினரும் பெரும்பாலும் அன்னிய நாட்டினர்களாகவும், அன்னிய நாட்டு பண்பாட்டிலும் நாகரீகத்திலும் மோகம் உடையவராகவும், அன்னிய மதத்தவராகவும், நம் தாய்நாட்டுப் பண்பாட்டிலும், நாகரீகத்திலும் விருப்பமில்லாதவராகவும், வெறுப்பு மிக்கவராகவும் உள்ளவர்களே இருக்கிறார்கள். எனவேதான் இந்த நாட்டின் எந்தத் துறையைச் சேர்ந்த மாணவரும் மொழிப்பற்று, இனப்பற்று, மதப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுப் பிடிப்பு, நாகரீகப் பிடிப்பு, வேதப்பிடிப்பு முதலிய எதுவுமே இல்லாதவர்களாகவே பெரும்பாலும் இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்!! இருக்கிறார்கள்!!! அதாவது ஏறத்தாழ இன்றைக்கு உள்ள மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் நம் நாட்டு முன்னோர்களின் போதனைகளையும், சாதனைகளையும் சூன்யமாகவே கருதுகிறார்கள். மேலும், எல்லாவிதமான கலைகளும், அறிவியல்களும், அன்னிய நாடுகளிலிருந்துதான் நமக்கு இறக்குமதி ஆகி இருக்கின்றன என்றும், இனி என்றென்றைக்கும் இறக்குமதி ஆகவேண்டும் என்றும் நம்புகின்ற உணர்வுப் போக்கினைத்தான் உடையவர்களாக பெரும்பாலான மாணவர்கள் விளங்குகின்றார்கள். இந்த நிலை நீடித்தால் நம் நாட்டுக்குரிய தனித்த பண்பாட்டுச் சிறப்புக்களும், நாகரீகக் கூறுபாட்டுச் சிறப்புக்களும், கலைகளுக்கும் கல்விகளுக்கும் உள்ள தனித்தன்மை மிக்க சிறப்புக்களும், பிறவும் ... மிகமிக விரைவில் மங்கி மறைந்து போக நேரிடும்! மங்கி மறைந்து போக நேரிடும்! மங்கி மறைந்து போக நேரிடும்! இதன்பிறகு நம் நாட்டிற்குரிய இயற்கைச் சூழல்களுக்கும், தட்ப வெப்பநிலைகளுக்கும் ஏற்ற உணவு முறை, உடை முறை, உறவு முறை, இன்ப துய்ப்பு முறை, மருத்துவம்.... முதலியவை அனைத்தும் மறைந்து போய் அன்னிய நாட்டுக்குரியவையே எல்லாத் துறைகளிலும் ஆட்சி செய்ய நேரிடும், முன்னுரிமை பெற்றிட நேரிடும். அதனால் நாம் அன்னிய நாடுகளுக்கும், அன்னிய நாட்டு மதங்களுக்கும், அன்னிய நாட்டு வேதங்களுக்கும் அவை சார்ந்த அனைத்துக்கும் அடிமைப்பட்டு அடிமைகளாக வாழ்வதோடு உடல்நலத்தையும், உளநலத்தையும், வாழ்வியல் நலங்களையும், சமூக நலங்களையும் முழுமையாக இழந்து நோயாளிகளாக மாறி நடைப்பிணங்க -ளாகவே வாழ நேரிடும். அதாவது, இப்புவிப் பரப்பிலிருந்து நமது பண்பாடும், நாகரீகமும் இவை சார்ந்த அனைத்து வகையான நடைமுறைகளும், வாழ்வியல்களும் முழுமையாக அகற்றப்பட்டிடும், முழுமையாகவே அகற்றப்பட்டே விடும். அப்படிப்பட்ட ஒருநிலைக்கு நம் நாடும், நாமும் வரவேண்டுமா? வரவேண்டுமா? வர வேண்டுமா? நன்றாகச் சிந்தியுங்கள், சிந்தியுங்கள். உங்களுடைய சிந்தனை சரியான பயனைத் தருமென்றால் சந்தியுங்கள், சந்தியுங்கள், சந்தியுங்கள், பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களை.

(ஆ) இந்துவேத இந்துமத உணர்வோடும், எண்ணத்தோடும், நமது அரசியல் வாதிகள் செயல்படாததால் இந்திய விடுதலைப் போராட்டக் காலத்திலும், இந்திய விடுதலைக்குப் பிறகு உள்ள காலத்திலும், இந்துக்களின் வாழ்க்கை வறுமை நிறைந்ததாக, வெறுமை மிகுந்ததாக, அன்னியரால் வேட்டையாடப் படுகின்ற, வேட்டைப்பொருள் என்ற நிலை உடையதாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது. இதுதான்

உண்மை, இதுதான் உண்மை, இதுதான் உண்மை.

(இ) இந்து வேத விடுதலைக்காகவும், இந்து மத விடுதலைக்காகவும், இந்துக்களின் விடுதலைக்காகவும் போராடுகின்ற கழகங்களும், கட்சிகளும், இயக்கங்களும், வீரதீரம் மிகுந்த தலைவர்களும் இல்லாததால்தான் நமது உரிமைகளும், பெருமைகளும் வீணாகிப் போய்விட்டன! சிதைந்து சீரழிந்து விட்டன! பாழடைந்து இருளடைந்து விட்டன!... என்று சொல்லி விட முடியாது! என்று சொல்லி விட முடியாது!! என்று சொல்லி விட முடியாது!!! ஏனென்றால், நமக்குப் பற்றாக் குறையாக இருப்பது, இருந்தது; நமக்குத் தேவையாக இருப்பது, இருந்தது, நமது நிறுவனங்களோ, தலைவர்களோ அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல! நம்முடைய தேவையும், பற்றாக்குறையும் நமது இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும், இந்துவின் சமுதாய வாழ்வியல் பற்றிய நூல்களும்தான், நூல்களும்தான், நூல்களும்தான்.

(ஈ) அதாவது, நாம் பிறரைத் தாக்கவோ, பிறரோடு போராடவோ முற்படுவதற்கு முன் நம்மைப் பதப்படுத்திப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது நமக்குள் நல்ல ஒற்றுமையும், பற்றும், பாசப் பிணைப்பும், ஒருமித்த கருத்தும் இந்து வேத அடிப்படையிலும், இந்துமத அடிப்படையிலும் உருவாக்கப் பட்டிடல் வேண்டும்! உருவாக்கப் பட்டிடல் வேண்டும்!! உருவாக்கப் பட்டிடல் வேண்டும்!!! உருவாக்கப் பட்டிருக்க வேண்டும்! உருவாக்கப் பட்டிருக்க வேண்டும்!! உருவாக்கப் பட்டிருக்க வேண்டும்!!! உருவாக்கப் பட்டேயாக வேண்டும். அதற்கு நமக்குத் தேவை நூல்கள், நூல்கள், நூல்கள் ஆகும்.

(உ) ஆனால், இன்று வரை நம்முடைய தலைமைக்குருமார்களிடமோ! குருக்கள்களிடமோ! குருதேவர்களிடமோ! பூசாறிகளிடமோ! மடாதிபதிகளிடமோ! பீடாதிபதிகளிடமோ! இந்துவேதம் பற்றிய நூல்களோ அல்லது இந்துமதம் பற்றிய நூல்களோ! அல்லது இந்து வாழ்வியல் பற்றிய நூல்களோ! தேவையான அளவு கூட இருந்ததில்லை, இருந்ததில்லை, இருந்ததில்லை, இருந்ததேயில்லை. இன்றைக்கும் இருக்கவில்லை, இருக்கவில்லை, இருக்கவில்லை, இருக்கவேயில்லை. இதுதான் உண்மை, இதுதான் உண்மை, இதுதான் உண்மை. இந்த உண்மை கசப்பானதாக இருக்கலாம். இந்த உண்மையை நமது மதத்தைச் சார்ந்தவர்கள் யாருமே ஏற்கத் துணிவில்லாதவர்களாக இருக்கலாம். ஆனாலும் இதுதான் உண்மை! இதுதான் உண்மை! இதுதான் உண்மை! எனவே, இந்த உண்மை இனிவரும் காலத்திலும் நீடிக்க வேண்டுமா? நீடிக்க வேண்டுமா? நீடிக்க வேண்டுமா?....

(ஊ) அதாவது, இந்துவேதம் பற்றிய நூல்கள், இந்துமதம் பற்றிய நூல்கள், இந்து சமுதாயம் பற்றிய நூல்கள் இனிவரும் காலத்தில் கூட எவருக்குமே தேவையான அளவு கூடக் கிடைக்காது! கிடைக்காது!! கிடைக்காது!!! கிடைக்கவே கிடைக்காது!!!! கிடைக்க முடியாது! கிடைக்க முடியாது!! கிடைக்க முடியாது!!! கிடைக்கவே முடியாது!!!! என்ற அவலக் கேவல நிலைதான், என்ற இழிவழிவுக்குரிய பழிநிலைதான், என்ற சிதைவழிவுக்கும் சீரழிவுக்கும் உரிய நிலைதான்... தொடர்ந்திட வேண்டுமா? தொடர்ந்திட வேண்டுமா? தொடர்ந்திட வேண்டுமா?.... இந்துமதப் பத்தர்களே, பத்தியாளர்களே, ஆத்திகப் பெருமக்களே, ஆன்மீகப் பெருமக்களே, சத்தியாளர்களே, சித்தியாளர்களே, சித்து விளையாடல்காரர்களே, சாமியார்களே, சன்னியாசிகளே, பூசாறிகளே, குருக்கள்களே, தேசிகர்களே, ஓதுவார்களே, பண்டாரங்களே, பீடாதிபதிகளே, மடாதிபதிகளே, கலைஞர்களே, அறிஞர்களே, சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! உங்களுடைய சிந்தனை சரியான பயனைத் தந்தால் சந்தியுங்கள், சந்தியுங்கள், சந்தியுங்கள் பதினெண்சித்தர் மடாதிபதி அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களை.

## இந்துவேத அறிவும், இந்துமத அறிவும் அனைவருக்கும் தேவை!

12) (IV) (க) நம் நாட்டில் அரசியல்துறை, சமுதாயத் துறை, சமயத் துறை, கல்வித்துறை, கலைத்துறை, தொழில்துறை... என்று எல்லாத் துறைகளிலும் ஈடுபடுபவர்களுக்கு இந்துவேத அறிவும், இந்துமத அறிவும் இந்து வாழ்வியல் பற்றும், நம்பிக்கையும் இருந்தே தீர வேண்டும் என்ற தெளிவான முடிவான கட்டுப்பாடான கொள்கையும், நோக்கும், போக்கும், பல்வேறு காரணங்களால் இந்திய விடுதலைப் போர் நிகழ்ந்த காலத்தும், இந்திய விடுதலைப்போர் வெற்றி பெற்றுவிட்ட காலத்தும்; நமது தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் ஏற்படவே இல்லை! அதாவது, நமது தலைவர்களும், தொண்டர்களும் நமது வேத அறிவையும், மத உணர்வையும், இந்து வாழ்வியல் பற்றையும் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்திடத் தவறி விட்டார்கள்! வளர்த்திடத் தவறிவிட்டார்கள்! வளர்த்திடத் தவறிவிட்டார்கள்.

(ஆ) எனவே, இன்றைக்கு வாழும் நமது தலைவர்களும், தொண்டர்களும் செய்த தவறுகளை ஏற்றுக் கொண்டிட்டால், ஒப்புக் கொண்டிட்டால், இவர்களுக்கு உண்டாகக் கூடிய மனப்பான்மை தோல்வி மனப்பான்மை, குற்ற மனப்பான்மையே! சிந்தையின் வருத்தமே! நாட்டிற்கு ஊறு விளைவித்திடும், ஊறு விளைவித்திடும், ஊறு விளைவித்திடும், ஊறு விளைவித்தே விடும். எனவே, நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். இனி நடக்க இருப்பவையாவது நல்லவையாக இருக்கட்டும் என்றெண்ணித் துணிந்து செயல்பட இன்றைய நமது தலைவர்களும், தொண்டர்களும் முன்வர வேண்டும், முன்வர வேண்டும், முன்வர வேண்டும். முன்வந்தேயாக வேண்டும். இல்லாவிட்டால், இன்றுள்ள நமது தலைவர்களும், தொண்டர்களும் தொடர்ந்து தங்களுடைய குறைகளுக்காகவும், தவறுகளுக்காகவும் வருந்தாமல் அவற்றைச் சரியென்று பரிந்து பேசி வீணான விதண்டாவாதங்களையும், கண்மூடித்தனமான வம்பு வீம்புகளையும், அகம்பாவ ஆணவப் போக்குகளையும் வளர்த்துக்கொண்டே போக வேண்டியதிருக்கும். அதனால், இந்துக்களுக்கும், இந்த நாட்டை ஆள்பவர்களுக்கும் இடையே மிகப்பெரிய கசப்புணர்வு, இடைவெளியும், போராட்டமும், போரும் புகைந்து புகைந்து திடீரென கொழுந்து விட்டு எரியத் தொடங்கி, அது காட்டுத் தீ போல் எங்கும் பரவி ஒட்டுமொத்தமாக மிகப்பெரிய அழிவை வழங்கிடும், வழங்கிடும், வழங்கிடும். எனவே, மிகமிக எச்சரிக்கையோடு வருங்காலப் பேரழிவுகளை எண்ணிப் பார்த்திடும் அச்சத்தோடு உடனடியாக நம் நாட்டிலுள்ள அரசியல் துறை, சமுதாயத் துறை, சமயத் துறை, கலைத் துறை, கல்வித்துறை, தொழில்துறை ... முதலிய பல்வேறு துறைகளிலுள்ள தலைவர்களை யெல்லாம் ஒன்று திரட்டி கருத்தரங்குகளையும், பட்டி மன்றங்களையும், மாநாடுகளையும் கூட்டிக் கூட்டிச் சிந்தித்தாக வேண்டும். கூட்டிக் கூட்டிச் சிந்தித்தாக வேண்டும், கூட்டிக் கூட்டிச் சிந்தித்தாக வேண்டும், கூட்டிக் கூட்டிச் சிந்தித்தேயாக வேண்டும். இந்தக் கூட்டு முயற்சிச் சிந்தனைகள் சரியான பயனைத் தருமேயானால், அனைவரும் சந்தித்தேயாக வேண்டும், சந்தித்தேயாக வேண்டும், சந்தித்தேயாக வேண்டும், பதினெண்சித்தர் மடாதிபதி அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்களே.

## நாட்டின் இணைப்புச் சத்தி அந்நாட்டிற்குரிய வேதமும், வேதமதமும்தான்!

12) (V) (அ) ஒருவரை மற்றவரோடு, ஒரு சமூகத்தை மற்ற சமூகத்தோடு, ஒரு மொழியினரை அம்மொழியின் கிளை மொழியினரோடு, ஓர் இனத்தவரை அந்த இனத்தின் கிளை இனத்தவரோடு, ஒரு நாட்டவரை அந்த நாட்டைச் சேர்ந்த துணை நாட்டவரோடு இணைக்கும் சத்தியாக, ஆற்றலாக,

சாதனமாக அவர்களுக்கு உரிய வேதமும், வேதமதமும் இவை சார்ந்த வாழ்வியலும்தான் விளங்குகின்றன அல்லது இருக்கின்றன என்று பதினெண்சித்தர்கள் மிகத் தெளிவாகக் கூறுகிறார்கள். எனவே, நாட்டு வணக்கப் பாடல், நாட்டு வாழ்த்துப் பாடல் பாடப்படும் பொழுதே அந்நாட்டுக்குரிய வேத விளக்கப் பாடலும், வேதமத வாழ்த்துப் பாடலும் பாடப்பட்டேயாக வேண்டும் என்று பதினெண்சித்தர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்கள். அதாவது, அனைத்து வகையான இணைப்புக்கும், அதாவது நாட்டுக்குத் தேவையான அனைத்து வகையான இணைப்புக்களுக்கும் மிகச் சிறந்த இணைப்புச் சத்தியாக, ஆற்றலாக, சாதனமாக இருப்பது அந்தந்த நாட்டுக்குரிய வேதமும், வேதமதமும்தான்! வேதமும் வேதமதமும்தான்! வேதமும் வேதமதமும்தான்!

(ஆ) மேற்படிப் பேருண்மையை எந்த நாடாவது மறைத்தோ, குறைத்தோ மதிப்பிட்டாலும் சரி! அல்லது மறுத்தோ வெறுத்தோ எதிர்த்தோ செயல்பட்டாலும் சரி! அல்லது மறந்தோ துறந்தோ புறக்கணித்தோ ஒதுக்கியோ பதுக்கியோ செயல்பட்டிட்டாலும் சரி! அந்த நாடு மிகமிக விரைவில் தனக்குரிய எல்லாவகையான தனித்தன்மைகளையும், சிறப்பு மிக்க வடிவமைப்புகளையும், வாழ்வியல்களையும், உரிமைகளையும், பெருமைகளையும் முழுமையாக இழக்க நேரிடும், இழந்தழிய நேரிடும் ... ஒரு வேளை இருந்த இடமே தெரியாமல் போக நேரிட்டாலும் நேரிடும். எனவே, அரசியல் ஆதாயம் என்ற கொள்கையைக் கொண்டுள்ள அதிகார வட்டத்தின் நலனை விட அந்தந்த நாட்டுக்குரிய வேதம் தழைக்கவும், மதம் பிழைக்கவும் எடுக்கப்படக்கூடிய அல்லது மேற்கொள்ளக் கூடிய முயற்சிகள்தான் சிறந்தவை, சீரியவை, அரியவை, பெரியவை, பயன்மிக்கவை ஆகும், ஆகும், ஆகும்.

(இ) எனவே, வேதம் வேதமதம் என்பனவற்றிற்கான பலிபீடத்தில் அரசியல், அதிகார வட்டாரங்களை ஆகுதியாக்க, படையல் பொருளாக்க நேரிட்டாலும், அதைத் தயங்காமல் செய்யக் கூடியவர்களே இன்றைய இளைய தலைமுறையினராக இருக்க வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினராக இருக்க வேண்டும், இன்றைய இளைய தலைமுறையினராகவே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாளைய வரலாறு ஒளியுடையதாக இருக்கும். வெற்றியுடையதாக இருக்கும், வளமும் வலிவும் பொலிவும் மிகுந்ததாக இருக்கும்.

(ஈ) இந்துமதப் பத்தர்களுக்கு, பத்தியாளர்களுக்கு, சத்தியாளர்களுக்கு, சித்தியாளர்களுக்கு, சித்து விளையாடல் காரர்களுக்கு, சாமியார்களுக்கு, சன்னியாசிகளுக்கு, சாத்திரியார்களுக்கு, தோத்திரியார்களுக்கு, குருமார்களுக்கு, குருக்கள்களுக்கு, குருதேவர்களுக்கு, பூசாறிகளுக்கு, மடாதிபதிகளுக்கு, பீடாதிபதிகளுக்கு, ஆன்மீகப் பெரியவர்களுக்கு ... அனைத்துக்கும் இயக்கச் சத்தியாக விளங்கும் ஆச்சாரியார்களுக்கு... ஓர் அறிவிப்பு அழைப்பு வேண்டுகோளை விடுத்துக் கொள்கிறார், அருளுலகுக்கும் பொருளுலகுக்கும் ஞானசபைத் தலைவராக விளங்கும் பதினெண்சித்தர் மடாதிபதி அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள்... ...

(உ) அதாவது, 'சுயநலம், தன்னலம், பதவிவெறி, பணவெறி, அதிகாரவெறி, அகம்பாவ வெறி, ஆணவவெறி, வறட்டு வம்பு வீம்பு வெறி... முதலிய பல்வேறு வெறிகள் பிடித்தவர்கள் பெரும்பான்மையினராக இருக்கக் கூடிய ஆட்சி அமைப்பு சற்றும் எதிர்பாராத வகையில் இந்திய விடுதலைக்குப் பிறகு தொடர்ந்து அரசுக் கட்டிலில் கொலு வீற்றிருக்கிறது என்று நேரடியாகக் குற்றம் சாட்டக் கூடிய அளவிற்கு இந்துவேத துரோகப் போக்குகளும், இந்துமத விரோதப்

போக்குகளும், இந்துக்களின் நல எதிர்ப்புப் போக்குகளும் அரசாங்க நடவடிக்கைகளில் அதிகமாகி வருகின்றன, அதிகமாகி வருகின்றன, அதிகமாகி வருகின்றன என்ற பேருண்மை-யினைப் பற்றி அவசர அவசியமாகச் சிந்தித்தேயாக வேண்டும், அவசர அவசியமாகச் சிந்தித்தேயாக வேண்டும், அவசர அவசியமாகச் சிந்தித்தேயாக வேண்டும். அதாவது, குறுகிய சுயநலவெறி என்ற வியாதி பிடித்த அரசாங்கம் நம் நாட்டைப் பாதித்திருக்கிறது, பாதித்திருக்கிறது, பாதித்திருக்கிறது.

(ஊ) எனவே, நாம் நமது நாட்டு நலனைப் பற்றி விவாதிக்க வேண்டும், விவாதிக்க வேண்டும், விவாதிக்க வேண்டும், விவாதித்தே தீர வேண்டும். ஆனால், இந்த விவாத அரங்குகள் நம்முடைய கோயில் வளாகங்களில்தான் நடைபெற வேண்டும், கோயில் வளாகங்களில்தான் நடைபெற வேண்டும், கோயில் வளாகங்களில்தான் நடைபெற வேண்டும். அப்பொழுதுதான் அந்த விவாதங்களில் இம்மண்ணுக்கே உரிய பண்பாட்டின் அடிப்படையும், நாகரிகத்தின் அடிப்படையும், வாழ்வியல் மரபுகளின் அடிப்படையும், அன்றாட ஒழுகலாறுகளின் விதிகளின் அடிப்படையும், நீதிகளின் அடிப்படையும், நம்பிக்கைகளின் அடிப்படையும், நெறிமுறைகளின் அடிப்படையும்... பாதிக்கப் படாமல், மீறப்படாமல், விவாதங்கள் நேர்மையாக, உண்மையாக, நன்மை தரத்தக்கதாக நிகழ்ந்திடும், நிகழ்ந்திடும், நிகழ்ந்திடும். ... நிகழ்த்தப் பட்டிடும், நிகழ்த்தப் பட்டிடும், நிகழ்த்தப் பட்டிடும். ஏனெனில், நம் மக்களின் தனிமனித வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும் அரண்களாக, கோட்டை கொத்தளங்களாக, பாடிவீடுகளாகப் பாசறைகளாக விளங்குகின்றவைதான் நம்முடைய கோயில்கள், நம்முடைய கோயில்கள், நம்முடைய கோயில்கள்.

(எ) மேற்படி முயற்சிகளுக்கு நமது நடைமுறை அரசாங்கம், மாநில அரசு, நடுவண் அரசு என்ற வேறுபாடின்றி கைகொடுத்தால் நல்லது; அல்லது ஒத்துழைத்தால் நல்லது; அல்லது துணையாக இருந்தால் நல்லது; அல்லது எல்லாவகையான ஏந்துகளையும் நல்கி உரிய அளவில் பெரிய பாதுகாப்புக்களையும் தந்தால் நல்லது, நல்லது, நல்லது. வாழ்த்துவோம், வரவேற்போம்! வாழ்த்துவோம் வரவேற்போம்! வாழ்த்துவோம் வரவேற்போம்! இல்லையென்றால் நமது முனிவர்கள், இருடிகள், ஞானிகள், மகான்கள் எனப்படும் நமது முன்னோர்களின் புண்ணியங்களையும், புகழையும் நினைத்து நமது இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் சேர்ந்த அனைத்து வகைப்பட்ட கலைஞர்களும், அறிஞர்களும், அருளாளர்களும் துணிந்து அரசியலில் நேரடிப் பங்கு பெற்றே ஆக வேண்டும் என்று முடிவெடுத்து அடிப்படையான செயல் திட்டங்களோடு செயலில் இறங்குவார்களேயானால் வெற்றி உறுதி, வெற்றி உறுதி, வெற்றி உறுதி... அந்த வெற்றியினால் நாம் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டியவைகள் அனைத்தும் முறையாக வளர்க்கப் பட்டுவிடும், முறையாக வளர்க்கப் பட்டுவிடும், முறையாக வளர்க்கப் பட்டுவிடும். அதன்மூலம், இன்றுவரை நமக்கு ஏற்பட்டுள்ள அல்லது ஏற்பட்டு விட்ட குறைகள் அனைத்தும் குறைக்கப் பட்டு, மறைக்கப்பட்டு விடும் அல்லது அகற்றப்பட்டு விடும். நமது துரோகிகள் திருந்துவார்கள் அல்லது திருத்தப் படுவார்கள். நமது விரோதிகள் ஒடுங்குவார்கள் அல்லது ஒடுக்கப் படுவார்கள். நமது மறுப்பாளர்களும், எதிர்ப்பாளர்களும், வெறுப்பாளர்களும் நமது ஆதரவாளர்களாக மாறுவார்கள் அல்லது மாற்றப் படுவார்கள். அப்படிப்பட்ட ஒரு பொற்காலத்தை உருவாக்குவதற்காக நம்முடைய இந்துவேத இந்துமத கலைஞர்களும், அறிஞர்களும், அருளாளர்களும், ஊழியர்களும், தொண்டர்களும், தலைவர்களும், நிறுவனங்களும், நிர்வாகங்களும் புதிய சுறுசுறுப்போடு பாடுபட முன்வர வேண்டும், பாடுபட முன்வர

வேண்டும், பாடுபட முன்வர வேண்டும் என்ற விருப்பாற்றலால்தான், கருத்துப் போக்கால்தான், நோக்கால்தான் நமது பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்

- ✓ "இந்துக்களே! இந்துவேதத்தையும் இந்துமதத்தையும் காப்பாற்ற வாருங்கள்"
- ✓ "இந்துக்களே இந்துவேதத்தையும் இந்துமதத்தையும் புரிந்து கொள்ள வாருங்கள்"
- ✓ "இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனடியாக இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"
- ✓ "இந்துக்களே! இந்துவேதம் தழைக்க இந்துமதம் பிழைக்க உழைக்க அழைக்கிறோம் வாரீர்! வாரீர்! வாரீர்!"

... ... ... ... ...

என்ற வகைவகையான அறிவிப்பு அழைப்பு முழக்கங்கள் வாரிவாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். வாரிவாரி வழங்கிக் கொண்டிருக்கிறார், வாரிவாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

***[மூலநகல்: தென்மண்டல நிர்வாகக்குழு தயாரித்து வெளியிட்ட நகல்.]***



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரார்**

# சித்தர்களும் அவர்கள் தொடர்பான கருவறைகளும்

(1) பதினெண்சித்தர்கள் என்பவர்கள் விண்வெளியிலுள்ள 108 திருப்பதி அண்டங்களிலும், 243 சத்தி அண்டங்களிலும், 1008 சிவாலய அண்டங்களிலும் இருக்கிறார்கள். இம்மண்ணுலகுக்கு கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் வந்த பதினெண் சித்தர்கள் 'மூலப் பதினெண் சித்தர்கள்' எனப்படுவார்கள். இவர்களைப் பற்றிய விவரங்கள் மறையாக (இரகசியங்களாக) காக்கப் படுகின்றன. இவர்களேயல்லாமல் அனாதி பதினெண்சித்தர்கள், ஆதிப் பதினெண்சித்தர்கள், பாதிப் பதினெண்சித்தர்கள், மீதிப் பதினெண்சித்தர்கள், முதல் யுகத்துப் பதினெண்சித்தர்கள், 2வது யுகத்துப் பதினெண்சித்தர்கள், 3வது யுகத்துப் பதினெண்சித்தர்கள், 4வது யுகத்துப் பதினெண்சித்தர்கள் என்று பல்வேறு தலைப்புக்களில் பதினெண்சித்தர்களின் பட்டியல்கள் குருபாரம்பரியங்களிலும், இலக்கியப் பாரம்பரியங்களிலும், அரச பாரம்பரியங்களிலும் காணக் கிடக்கின்றன.

இவையல்லாமல் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி [கி.மு. 100 முதல் கி.பி.150] குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் கலியுகத்துப் பதினெண்சித்தர்கள் என்று 18, 18 பேர்களாக மூவாயிரம் ஆண்டுகளுக்குரிய பதினெண்சித்தர்கள் பட்டியல்கள் சுமார் 34க்கு மேல் தருகின்றார். [குருதேவர் நிறையக்ஞர், அருளாட்சி நாயகம் அலுவல் மிகுதியினாலும், நினைவு ஆற்றல் ஓரளவு குறைந்திருப்பதனாலும் இந்த பட்டியல் எண்ணிக்கை 34 அல்லது 36 அல்லது வேறா என்று குறிக்க முடியவில்லை என்பதைக் குறித்துக் கொள்ள விரும்புகிறார்].

இவருக்குப் பிறகு வந்த தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங் கரைக் கருவூரார் அவர்கள் மிகத் தெளிவாகத் தமது குருபாரம்பரியத்தில்; பத்தாவது

பதினெண்சித்தர் பீடாதிபதிக்குப் பிறகு தோன்றிய பதினெண்சித்தர்களின் தொடர் முயற்சிகளால்தான் இந்துமதம் பிற மண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்களின் கொடிய முயற்சிகளாலும், வேதமதம் எனும் கொடிய நோயாலும் சமசுகிருத மொழி எனும் பெரிய நெருப்பாலும் எவ்வளவுதான் பாதிக்கப் பட்டாலும், நலியாமல், மெலியாமல், வலிவோடும், வளத்தோடும் இருந்து வருகின்றது - என்று எழுதிச் சுமார் ஒன்பதுக்கும் மேற்பட்ட பதினெண் சித்தர்களின் பட்டியலைத் தருகின்றார். ஒவ்வொரு பட்டியலும் சரியாகப் பதினெட்டுச் சித்தர்களின் பெயர்கள் இருக்கின்றன.

இவையல்லாமல் பதினெண்சித்தர் என்ற பெயரிலேயே கருவறைகளில் நிறைந்தவர்கள் என்ற கருவறைப் புத்துயிர்ப்புப் பணிகளைக் குறிக்கும் பொழுது சுமார் 40க்கும் மேற்பட்ட பதினெண்சித்தர்களின் பெயர்களைக் குறிக்கின்றார். இந்தப் பெயர்களில் பல பெயர்கள் தூய தமிழ்ச் சொற்களாக இல்லை. இவை யல்லாமல் இவர் காலத்தில் வாழ்ந்த பதினெண் சித்தர்களின் பட்டியல்கள் [கி.பி.785 முதல் கி.பி.1040] இரண்டு மூன்று இவருடைய குருபாரம்பரியத்-திலேயே காணப்படுகின்றன. இவருடைய மகன் கருவூர்த் தேவரும் பேரன் திருமாளிகைத் தேவரும் வாழ்ந்த காலங்களிலும் வாழ்ந்திட்ட பதினெண்சித்தர்களின் பட்டியல்கள் நாலைந்திற்கு மேல் இவர்களிருவரின் குறிப்புக்களில் இருக்கின்றன.

இவர்களுக்குப் பிறகே அதாவது கி.பி.1182க்குப் பிறகே சுமார் ஏழெட்டுப் பதினெண்சித்தர்களின் பட்டியல்கள் ஒழுங்கற்று ஏடுகளில் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இவை முறையான நேரடியான பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் வாரிசுகளின் படைப்புக்கள் பாதுகாக்கப் படாமல் போனதுதான். அத்துடன் அருளுலகில் ஊழ்வினையின் காரணமாகவோ, அல்லது விதியின் காரணமாகவோ அல்லது கடுமையான தொடர் முயற்சியின் காரணமாகவோ **தேவதைகள் அல்லது தேவர்கள் அல்லது தெய்வங்கள் தோன்றி அருள்வழங்கப் பெற்றுத் தோன்றக் கூடிய அருளாளர்களை யெல்லாம் ‘சித்தியாளர்கள்‘ என்று எண்ணாமல் அவர்களைச் ‘சித்தர்கள்’ என்றே அழைத்து கருத்துக் குழப்பத்தை உண்டாக்கி விட்டார்கள்.** அதாவது, சித்து விளையாடல் காரர்களையும், மந்திறவாதிகளையும், மந்திரிக்கின்ற உடுக்கையடிக்கும் பூசாறிகளையும், பரிகாரங்களைச் செய்யக் கூடிய குறிகாரர்களையும், மருளாடுபவர்களையும், அருளாடுபவர்களையும்.... ஒட்டு மொத்தமாக சித்தர் என்ற சொல்லாலேயே குறிக்கின்ற ஒரு தவறான மரபு காலப் போக்கில் எப்படியோ ஏற்பட்டது.

ஏனென்றால், காலப் போக்கில் தோன்றிய சித்தர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இலைமறைகாயாகவே வாழ்ந்தார்கள். பதினெண்சித்தர்களே தங்களுக்குரிய இலக்கண இலக்கியங்களை விளக்கியுரைக்கவோ மீண்டும் மலர்ச்சி பெறச் செய்யவோ அவற்றை ஆட்சி பெறச் செய்யவோ முயற்சிக்க முடியாத அளவிற்குத் தமிழ்மொழி சமசுக்கிருத மொழியால் கலப்புற்றுப் பாழ்பட்டும்; தமிழர்கள் அன்னியர்களிடம் கூலிகளாகவும், கங்காணிகளாகவும், எடுபிடிகளாகவும், அடிமைகளாகவும் வாழ்ந்து பதவிக்காகவும், புகழுக்காகவும் இனவுணர்வும் மொழியுணர்வும் மானவுணர்வும் ஒற்றுமையுணர்வும் நலியப் பெற்றவர்களாகவும், நோயுற்றவர்களாகவும், பாதிக்கப்பட்டும் இருந்தார்கள்.

அதாவது, **‘சித்தர்கள் தங்களுடைய அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தமிழ்மொழி வழியாகத்தான் இம்மண்ணுலகில் அனைத்து விதமான அருள்வித்துக்களையும் விதைத்து அருட்பயிர் விளைவித்திட்டார்கள். இங்கு தமிழ்மொழி பயிரினங்களின் வித்தாகவும் பயிரினங்கள் வளருவதற்குரிய நீராகவும் உரமாகவும் சித்தர்களால் பயன்படுத்தப் பட்டது என்ற கருத்தைத்தான் ஆழமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் புரிந்து கொண்டாக வேண்டும். இந்தத் தமிழின் தாய்மையையும் வாய்மையையும் உரிமையையும் பெருமையையும் அரச வாழ்வையும் அருளுலக கருவறை**

**வாழ்வையும் போற்றிப் பேணிக் காப்பாற்றிடும் ஆற்றலும் ஆர்வமும் வல்லமையும் இல்லாமற் போன தமிழர்களிடம் எதையும் சொல்லவோ செய்யவோ விரும்பாமல்தான் சித்தர்கள் எல்லோரும் இலைமறை காயாகவே வாழ்ந்து சென்றார்கள்.....'** என்ற கருத்து வாசகச் சொற்றொடர் "மூவர் தோற்றம்" என்ற நூலிலும் 'தமிழ் விடுதூது' என்ற நூலிலும் சந்தானாச்சாரியார்கள் எனப்படும் சாத்திர ஆச்சாரியார்கள் பற்றிய நூலிலும் அப்படியே மாறாமல் எடுத்தாளப் பட்டிருக்கின்றது. எனவே, இந்த வாசகம் நாடறிந்த ஒரு வாசகமாகவும்; கற்றவர் ஏற்றுப் போற்றிடும் வாசகமாகவும் இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

(2) அருளுலகில் வழக்காற்றில் "சித்தர்களையும் மற்றவர்களையும் பிரித்தறிய மாட்டாதவர்கள் செத்தவரோடு ஒப்பர்" என்ற வாசகம் நிலைத்த நீடித்த செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. அதாவது, முன்பு பட்டியலிட்டுக் காட்டியது போல், அருளுலகில் அருளாற்றல் பெற்ற அனைவருமே சித்தர் என்ற பெயரால் குறிக்கப்படும் தவறான போக்கிற்கு ஒரு மாபெரும் எதிர்ப் போராட்டம் தொடர்ந்து நிகழ்ந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. இப் போராட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நல்ல பயன்கள் விளையாத காரணத்தால்தான் - "சித்தர்கள் சட்டி சுட்டது கைவிட்டது என்று செயல்பட்டார்கள்." "சித்தர்கள் நாட்டாரைத் திருத்த மாட்டாது காட்டிற்கு ஏகினார்கள். சித்தர்கள் இலைமறை காயாகவே இருந்தேகுபவர்கள் ஆவார்கள்" என்ற வாசகங்கள் சித்தர்களைப் பற்றித் தோன்றின.

அதாவது தமிழ்மொழிக்கு இழிவும், நலிவும், மெலிவும், செல்வாக்கற்ற கபட நிலையும் வலுப்பட்டு விட்ட காரணத்தினால்தான் சித்தர்கள், 'தமிழே தெரியாதவர்களுக்குத் தத்துவம் எப்படித் தெரியும்?"; 'தமிழே தெரியாதவர்களுக்குப் பத்தி நிலைகள் எப்படிச் சித்தியாகும்?'; 'தமிழோசை கேளாக் கருவறை எப்படி அருளாட்சிப் பாசறை யாகும்?' என்றெல்லாம் சித்தர்களே எழுதிச் செல்லும் நிலை உருவாகி விட்டது.

(3) தமிழர்கள் அன்னிய மொழியினர்களுக்கும், அன்னிய இனத்தவர்களுக்கும், அன்னிய நாட்டவர்களுக்கும் அளவுக்கதிகமான மதிப்பை வழங்கி வாழுகின்ற அடிமையுணர்வையே அதிகமாகப் பெற்று விட்டார்கள். இதுபற்றிப் பல பதினெண்சித்தர்களும் 48 வகைச் சித்தர்களில் பல சித்தர்களும் வெளிப்படையாகவே வருத்தம் தெரிவித்தும், கண்டிப்புத் தெரிவித்தும், திருத்தங்கள் தெரிவித்தும் எண்ணற்ற கருத்து வாசகங்களை வழங்கிச் சென்றுள்ளார்கள். இப்படிப் பலரும் தமிழர்களைத் திருத்த முயன்று தோற்றக் காரணத்தினால் சந்தானாச்சாரியார்களுக்குப் பிறகு தோன்றியவர்கள் சைவசமயச் சாத்திறங்களைத் தொகுத்தும் வகுத்தும் பகுத்தும் சைவ மடங்களின் மூலம் காத்து வளர்க்க முற்பட்டனர். அதே நேரத்தில் 48 வகையான வழிபாட்டு நிலையங்களைப் பற்றிய பேருண்மைகளைப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் வெளியிட்டுக் கொள்வார்கள் என்று முடிவெடுத்து; குறிப்பிட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகளில் சமாது கொண்டருளும் சித்தர்களின் பட்டியலைப் பலர் பலவாறு தொகுத்துத் தொகுத்து ஏட்டில் எழுதியும், நாட்டில் எடுத்துக் கூறியும் காத்திட்டார்கள். அவற்றுள் சில;

1. **மதுரை**:- ஏழு பருவத்து மீனாட்சிகள், அங்கயற்கண்ணிகள், அங்கயற்கன்னிகள், சொக்கிகள், இல்லற வாழ்வேற்ற அங்கயற்கண்ணர்கள், கண்ணிகள், அங்கயற் கன்னர்கள், கன்னிகள், சொக்கர்கள், சொக்கிகள், திருமணமாகாத சுந்தரானந்தர், கமலமுனி, போகமுனி, மோகமுனி முதலியோர்.
2. **திருநெல்வேலி:-** ஏழுபருவத்து காந்திமதியம்மன்கள், திருமணமாகாத நெல்லையப்பர்கள், திருமணமான நெல்லையப்பர், காந்திமதியம்மன்கள், அகத்தியர், புலத்தியர், போத்தியார், புத்தர் முதலானோர்.

3. **பாபநாசம்**:- புலத்தியர், புரிக்கண்ணர், சட்டநாதர், மாயோன், இயமன் முதலானோர்

4. **கும்பகோணம்:-** கும்பமுனி, தேரையர், சிங்கையர், கரடியார், குளத்திதாமறையாள் முதலானோர்

5. **சிதம்பரம்**:- திருமூலர், புலிப்பாணி, பதஞ்சலி, வியாசர், நந்தி, பாம்பா குதிரை முகத்தார், நெடியாள், பூவிருந்தவல்லி, மயிலி முதலானோர்

6. **திருப்பதி**:- கொங்கணர், வசிட்டர், விசுவாமித்திரர், கலைக்கோட்டு முனிவர், மூங்கிலடியார், மேகமோட்டி, குபேரன், பொன்னுடையாள், பூவழகி, அழகரசி, முத்தாட்டி, ஔவை, முருகன், வள்ளி, தெய்வானை, பாம்பாட்டி முதலானோர்

7. **திருவரங்கம்**:- சட்டமுனி, மச்சமுனி, கமலமுனி, காளங்கி, போகர், திட்டையார், பெருந்தேவி, மண்ணுடையாள், வாவரசி, ஔவையார், நாதாங்கி, தன்வந்திரி, கண்ணதேவன், பலராமர், காசிபர், பரத்துவாசர், தும்பைமுனி, ஓடைச்செல்வி, சங்காத்தாள், முக்கடலுடையாள் முதலானோர்.

8. **அழகர்மலை:-** முருகன், வள்ளி, தெய்வானை, இராமதேவர், விசுவாமித்திரர், கோரக்கர், மாங்காயர், தேக்குடையார், பாறையார், மலைராசன், முத்தழகி, பூமாலை வேட்டச்சி முதலானோர்.

9. **காசி:-** நந்தி, விசுவாமித்திரர், வசிட்டர், பராந்தகன், பராந்தகி, விசும்பளந்தான், விசும்பளந்தாள், கபாலீசுவரன், கபாலீசுவரி, அகப்பேய்ச் சித்தர், மறக்காய்ச் சித்தர், இடைக்காடர், கடுவெளிச் சித்தர், வெண்பனிச் சித்தர், முடக்குச் சித்தர், நவநாத சித்தர், மோகினி, இடாகினி, இயக்கி, திரிசூலி முதலானோர்

10. **காஞ்சிபுரம்:-** கடுவெளிச்சித்தர், வெட்டவெளிச் சித்தர், எருக்கம்பூ சித்தர், அகத்தியர், புலத்தியர், நாரதர், இயவாள், குபேரன், ஏழ்கன்னிமார், காமாட்சி, பைரவி, மேகலை, கொற்றவை, காடுகிழாள் முதலானோர்

11. **திருப்பரங்குன்றம்**:- மச்சமுனி, போகநாதர், யோகநாதர், ஒகநாதர், கூத்தபிரான், முருகன், வள்ளி, தெய்வானை, காத்தவராயன், பைரவன், அன்னபூரணி, மோகினி, இடாகினி, பிடாரி, தாடகைப் பிராட்டி, பொற்றாமரையாள், பூந்தளிராள், பிறமண், திருமாள் முதலானோர்.

12. **திருக்காளத்தி**:- வேடன் கண்ணப்பர், கருவூரார், பிறமண், குபேரன், வாயு, நவநாதசித்தர், நவகோடிச் சித்தர், அழகு நாச்சியார், அங்காளம்மன், காளியம்மன் முதலானோர்.

விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகிறோம்.

***[இதன் மூலநகல் மதுரைச் சித்தரடியான் ம.சி. இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது]***

------------

*"...நம்மோடு எத்தனை பேர் வருகின்றார்கள் என்பதைப் பொறுத்ததல்ல நம்முடைய வெற்றி. ஏனெனில் நாம் எதையும் செயல்வடிவில் சாதித்து முடிக்க நினைப்பவர்கள் அல்ல. நம்முடைய பணியெல்லாம் தமிழினப் பகைவர்களும், காலமும், சோம்பலும், தன்னலமும், குறுகிய நோக்கமும், அற்பச் சிந்தையும், ஆணவ நெஞ்சமும் குறைத்திட்ட, மறைத்திட்ட, மறந்துபோகச் செய்திட்ட, இறந்து போகச் செய்திட்ட அனைத்தையும் புத்தகங்களாக வெளியிடுவதும், சொற்பொழிவுகளாக வெளிவிடுவதும், இனிய இசைப் பாடல்களாக வெளியிடுவதும், சுவைமிக்க கூத்துக்களாக வெளியிடுவதுமேயாகும்...."*

***[குருதேவரால் 1978இல் சித்தரடியான் கு.சத்தியமூர்த்தி அவர்களுக்கு எழுதிய அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட வாசகம்.]***

# தமிழுக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்?

## I. நாம் ஏன் வளர முடியவில்லை?

தமிழ் விடுதலையே தமிழின விடுதலை.

தமிழின் பெருமையே தமிழினப் பெருமை.

தமிழின் உரிமையே தமிழின உரிமை.

தமிழின் வளர்ச்சியே தமிழின வளர்ச்சி.

தமிழின் மலர்ச்சியே தமிழின மலர்ச்சி.

தமிழின் விழிச்சியே தமிழின விழிச்சி.

தமிழின் எழிச்சியே தமிழின எழிச்சி.

தமிழின் கிளர்ச்சியே தமிழின கிளர்ச்சி.

தமிழ்மொழிப் போரே தமிழினப் போர்.

தமிழ்மொழிச் செழிச்சியே தமிழினச் செழிச்சி.

தமிழ்மொழியின் உயர்ச்சியே தமிழின உயர்ச்சி.

தமிழ் மொழியின் வரலாறே தமிழின வரலாறு.

தமிழ்மொழியின் பண்பாடே தமிழினப் பண்பாடு.

தமிழ்மொழியின் நாகரீகமே தமிழின நாகரீகம்.

தமிழ்மொழியின் கலையே தமிழினக் கலை.

தமிழ்மொழியின் அறிவியலே தமிழின அறிவியல்.

தமிழ்மொழியின் தொன்மையே தமிழினத் தொன்மை.

தமிழ்மொழியின் மேன்மையே தமிழின மேன்மை.

தமிழின் திண்மையே தமிழினத் திண்மை.

தமிழின் நுண்மையே தமிழின நுண்மை.

தமிழின் ஒண்மையே தமிழின ஒண்மை.

தமிழின் ஆண்மையே தமிழின ஆண்மை.

தமிழின் ஆட்சியே தமிழின ஆட்சி.

தமிழின் மீட்சியே தமிழின மீட்சி.

தமிழின் பற்றே தமிழினப் பற்று.

தமிழின் பாசமே தமிழினப் பாசம்.

தமிழின் ஒருமைப்பாடே தமிழின ஒருமைப்பாடு.

தமிழின் நம்பிக்கையே தமிழின நம்பிக்கை.

தமிழின் மானமே தமிழின மானம்.

தமிழின் வாழ்வே தமிழின வாழ்வு.

தமிழின் உய்வே தமிழின உய்வு.

தமிழ்மொழியை மதிப்பதே தமிழின விதியை நிர்ணயிக்கும்.

தமிழ்மொழி உணர்வே தமிழின உணர்வு.

தனித் தமிழ் இயக்கமே தமிழின விடுதலை இயக்கம்.

தனித் தமிழ் நாட்டமே தமிழின ஈட்டம்.

## II

தமிழ்மொழி கலைகளில் சிறந்தது. தமிழர்களும் கலைகளில் சிறந்திருக்கிறார்கள். இன்றைய விஞ்ஞானத்தில் தமிழர்கள் வளரவில்லை. எனவே, தமிழும் அறிவியல் மொழியாக வளரவில்லை. அதாவது, தமிழர்கள் அறிவியலில் தனித்த, புகழ்மிக்க, பயன்மிக்க, உயர்ந்த வளர்ச்சிகளை அடையவில்லை. அதனால், தமிழ்மொழியும் சிறந்த அறிவியல் மொழியாக வளர முடியவில்லை. எனவே, இன்றைய நிலையில் உள்ள அறிவியல்கள் அனைத்தும் தமிழ்மொழியில் மொழி பெயர்க்க வேண்டும். அப்போதுதான், தமிழ்மொழி அறிவியல் மொழியாகிடும். அதன்பிறகு இந்த அறிவியல் மொழியாக்கப்பட்ட தமிழ்மொழியைக் கற்கும் தமிழர்கள் சிறந்த அறிவியல் மேதைகளாவதோடு தமிழ்மொழியும் அறிவியல் மொழியாக வளவளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்றிடும். எனவே, உடனடியாகத் தமிழ்மொழி வாயிலாகத்தான் மருத்துவம், பொறியியல், பிற விஞ்ஞானங்கள் அனைத்தும் கற்றிட வேண்டும் என்று சட்டம் செய்திடல் வேண்டும். அப்போது புத்தகம்

எழுதுபவர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் தானுகவே தோன்ற ஆரம்பித்திடுவார்கள்.

### III தமிழ்மொழிப் பெருமையின் போலிநிலை

தமிழ்நாட்டில் தமிழின் பெயராலே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளும், சமுதாயக் கட்சிகளும், சமயக் கட்சிகளும், தனிப்பட்ட நிறுவனங்களும், புகழ்மிக்க தனிமனிதர்களும் ஏராளமாக இருக்கின்றுர்கள். எல்லோருமே தமிழ் வாழ்க! தமிழ் வளர்க! என்று கூறுகிறுர்கள். ஆனுல், யாருக்குமே தமிழை வாழவைக்கவோ அல்லது வளர்க்கவோ விருப்பம் இல்லை. அதாவது, யாரிடமுமே தமிழை வாழவைக்கும் முயற்சியும், தமிழ் வளர்க்கும் முயற்சியும் இல்லை. எல்லோருமே போலியாகத்தான் தமிழ் வாழ்க! தமிழ் வளர்க! என்று குரல் கொடுக்கிறுர்கள். கூச்சல் போடுகிறுர்கள். அதாவது, ஏறத்தாழ எல்லோருமே தமிழ் வாழ்க! தமிழ் வளர்க! என்ற சொற்களைத் தங்களுக்கு வேலியாகவே பயன்படுத்திக் கொள்கிறுர்கள். ஏறத்தாழ எல்லோருடைய நெஞ்சமும் சிந்தையும் தமிழ்மொழியைப் பற்றிய ஆக்கப் பூர்வமான சிந்தனைகள் ஏதும் இல்லாமல் காலியாகவே கிடக்கின்றன. இன்னும் சொல்லப் போனுல் பெரும்பாலான தமிழினத் தலைவர்கள் அந்நிய மொழியினரின் கைக்கூலிகளாகத்தான் இருக்கிறுர்கள். அதாவது பெரும்பாலான தமிழினத் தலைவர்கள் தமிழ் மொழியைப் பொறுத்தவரை போலிகளாகவும், கூலிகளாகவும், கருங்காலிகளாகவும், தமிழ்மொழித் துரோகிகளாகவும், விரோதிகளாகவும்தான் வாழுகிறுர்கள். எனவே, தமிழ்மொழிக்கு அந்நிய மொழியினர்களால் வருகின்ற இழிவையும் அழிவையும் விட; தமிழர்களிலே உள்ள தமிழ்மொழித் துரோகிகளாலும் விரோதிகளாலும் வருகின்ற இழிவுகளும், அழிவுகளும்தான் அதிகம், அதிகம், அதிகம். எனவே, தமிழர்களுக்கிடையே இருக்கக் கூடிய தமிழ்மொழிப் பற்றில்லாத தமிழ்மொழித் துரோகிகளையும் விரோதிகளையும் சீர்திருத்தும் பணி அல்லது ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்பணி உடனடியாகத் துவக்கப் பட்டேயாக வேண்டும். இதைத் தவிர தமிழ்மொழியின் வாழ்வு நிலைகளையும், வளர்ச்சி நிலைகளையும் பற்றி வழங்கப்படும் தவருன செய்திகளுக்கு உடனடியாக, நேரடியான, முழுமையான மறுப்பு தெரிவிக்கப் பட்டேயாக வேண்டும். அதுதான் தமிழை வளர்க்கும்; வாழவைக்கும்; ஆட்சிமீட்சி பெறச் செய்யும்.

### IV. தமிழ்மொழி பற்றிய தவருன செய்தி

“தமிழ்மொழிதான் உலகிலேயே முதல்மொழி, மூத்தமொழி. தமிழ்மொழியில்தான் மூன்று சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்தன. தமிழில்தான் உலகிலேயே தொன்மையான சங்க இலக்கியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இருக்கின்றன. தமிழிலுள்ள திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை பற்றிய செய்திகள் உலகம் முழுவதும் தெரியும். உலக மக்களால் திருக்குறள் பைபிளுக்கும், குரானுக்கும் சமமாக மதிக்கப்படுகிறது, போற்றப்படுகிறது. இளமுறியாக் கண்டத்திலிருந்து தமிழர்களின் பண்பாடும், நாகரீகமும்தான் இம்மண்ணுலகப் பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும் மூலம் என்ற கருத்துக்கள் உலக ஆராய்ச்சியாளர்களால், அறிவியல் மேதைகளால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டன....” என்பன போன்ற இந்தச் செய்திகள் முழுக்க முழுக்கத் தவருனவை, ஏமாற்றுனவை, பொய்யானவை, போலியானவை, பித்தலாட்டமானவை.

ஏனென்றுல், Encyclopaedia Britannica, அதாவது உலகம் முழுவதும் ஒத்துக் கொள்ளப்பட்ட பிரிட்டன் நாட்டுக் கலைக்களஞ்சியத்தில் மேலே குறிப்பிட்டிருந்த செய்திகளின் எந்தச் செய்தியும் இடம்பெற வில்லை, இடம்பெற வில்லை, இடம்பெற வில்லை. தமிழ் நாட்டு அரசாங்கமோ, கட்சிகளோ, தனிப்பட்ட தலைவர்களோ இதற்காக வருந்தவுமில்லை. அதற்குரிய முயற்சிகளில் ஈடுபடவும் இல்லை.

**குறிப்பு:-** கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து உலகத் தமிழ் மாநாடுகள் நடத்துகிறோம். இதில் ஒரு சிறு பகுதியை செலவிட்டால் போதும். பிரிட்டன் நாட்டுக் கலைக் களஞ்சியத்தினரை தமிழகத்துக்கு வரவழைத்து மேலே கூறிய செய்திகள் அனைத்தையும் நேரில் விளக்கமாக்கி அக் கலைக் களஞ்சியத்தில் வெளியிடுமாறு செய்யலாம். அல்லது அந்தக் கலைக்களஞ்சியத்திற்கு ஈடாக தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் வரலாறு, தமிழ்நாடு பற்றிய செய்திகள்; தமிழர் சமயம், சமுதாயம், தனிமனித வாழ்வு பற்றிய செய்திகள் முதலிய அனைத்தையும் விரிவாக விளக்கி ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மனி, இரசியம், சீனம், உருது முதலிய மொழிகளில் கலைக் களஞ்சியத்தை அழகிய பல தொகுதிகளாக வெளியிடலாம். இவை அனைத்திற்கும் ஆகக்கூடிய செலவு ஓர் உலகத் தமிழ் மாநாட்டிற்கு ஆகும் செலவில் பாதிக்கு மேல் ஆகாது, ஆகாது, ஆகாது, ஆகவே ஆகாது.

**சிறப்புக் குறிப்பு:-** இப்பேருண்மை ஆயிரமாயிரம் முறை எழுதப்பட்டும், மேடைகளில் பேசப்பட்டும் தமிழ்நாட்டு அரசாங்கமோ, தமிழினத் தலைவர்களோ உணர மறுக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன? தொடர்ந்து இந்தியாவின் விடுதலைக்கு முன்னும் பின்னும் தமிழர்களை அந்நியர்களும், அந்நிய மொழிகளும் நேரடியாகவும், கங்காணிகள் மூலமாகவும், கைக்கூலிகள் மூலமாகவும், கருங்காலிகள் மூலமாகவும், அப்பாவிகள் மூலமாகவும், ஏமாளிகள் மூலமாகவும், துரோகிகள் மூலமாகவும் அடக்கியாண்டு வருவதுதான், அடக்கியாண்டு வருவதுதான், அடக்கியாண்டு வருவதுதான். இதைப் பச்சையாகவும், கொச்சையாகவும் கூற வேண்டுமென்றால் தமிழினத்துக்குத் தமிழனே தலைவனாக, குருவாக, குருபீடமாக, ஆச்சாரியாராக, ஆசிரியராக, கலைஞனாகப் பணிபுரியும் பொற்காலம் உருவாகவேண்டும், உருவாக வேண்டும், உருவாக வேண்டும். இல்லையெனில் தமிழன் ஏமாற்றப்படுவது தொடர்கதையாகிடும். உலகெங்கும் தமிழன் எடுபிடியாகவும், கூலிக்காரனாகவும், மானங்கெட்ட ஈனப் பிறவிகளாகவும் வாழ நேரிடும். எனவே, தமிழ்மொழியைப் புரிந்த தமிழ்மொழித் தலைவன், தமிழினப் பற்றுடைய மெய்யான தமிழினத் தலைவன், தமிழ்ச் சமுதாயத்தின் தத்துவத்தின் வாரிசாகத் தோன்றிய தத்துவ நாயகத் தலைவன் தமிழ்நாட்டிற்கும் தமிழர்களின் உள்ளங்களுக்கும் தேவை, தேவை, தேவை.

## V தமிழ்மொழியே தமிழின விடுதலைப் போரின் ஆயுதம்

“தமிழ் மொழியே தமிழர்களை தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும், இனமான உணர்வும் பெறச் செய்யும் மருந்து.”

“தமிழ்மொழியே தமிழர்களுக்கு இனப்பற்றும், இன ஒற்றுமையையும், இன ஒருமைப்பாடும் உருவாக்கித் தரக்கூடிய அரிய சாதனம்.”

“தமிழ்மொழியே தமிழர்களுக்கு சமய சமுதாய அரசியல் விடுதலை உணர்வுக் கருத்துக்களை வழங்கும் தத்துவம்.”

“தமிழ்மொழியே தனிமனித விழிச்சிக்கும், சமுதாய எழிச்சிக்கும், அரசியல் செழிச்சிக்கும் உதவும் முயற்சிச் சத்தியாகும்.”

“தமிழ்மொழியே தமிழர்களைத் தாழ்ச்சி நிலைகளிலிருந்தும், வீழ்ச்சி நிலைகளிலிருந்தும், மீட்சி பெறும் பயிற்சிகளை வழங்கக் கூடியது.”

“தமிழ்மொழியே இன விரோதிகளையும், துரோகிகளையும் திருத்தக் கூடிய அருட்சத்தி.”

“தமிழ்மொழியே சொத்தையுற்றும், சத்தற்றும் போன சமுதாய உணர்ச்சியை சத்தி பெற செய்யும் சத்துணவு.”

“தமிழ்மொழியே விண்ணையும், மண்ணையும் உணர்ந்து கொள்ள உதவும் அறிவியல்.”

“தமிழ்மொழியே தமிழின விடுதலைப் போருக்குரிய நிறுவனக் கட்டமைப்புக்களையும், நிருவாக ஒழுங்கமைப்புக்களையும் உருவாக்கித் தரவல்ல ஆசான்.”

"தமிழ்மொழியே அந்நியர்களின் ஊடுருவல்களையும், தலைமைகளையும், தலையீடுகளையும் முறியடிக்கும் அரிய படை."

"தமிழ்மொழியே தமிழர்களுக் கிடையேயுள்ள அனைத்துவகை பிரிவின அமைப்புக்களையும், பிரிவினைச் சத்திகளையும் எரித்துச் சாம்பலாக்கும் பெருநெருப்பு அல்லது புரட்சி நெருப்பு."

VI

தமிழர்கள் மத வேறுபாடுகளையும், சாதி வேறுபாடுகளையும், கட்சி வேறுபாடுகளையும் கடந்து ஒன்றுபட்டு ஒருமைப்பட்டு ஒருமைப்பாட்டுடன் செயல்படக் கூடிய பொற்காலம், நற்காலம் உருவாக வேண்டும். அதனை உருவாக்குவது தமிழ்மொழி யுணர்ச்சி, தமிழ் இலக்கிய உணர்ச்சி, தமிழ்க் கலையுணர்ச்சி, தமிழ்ப் பண்பாட்டுணர்ச்சி, தமிழ் நாகரீக உணர்ச்சி, தமிழ் தத்துவ உணர்ச்சி, தமிழ்ச் சான்றோர்களைப் போற்றும் உணர்ச்சி, தமிழ் வரலாற்றுணர்வு உணர்ச்சி,... முதலியவைகள்தான். இதற்காக அனைத்தையும் தமிழ்மொழி வழியில்தான் கற்க வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும். ஏனென்றால், ஆங்கில மொழியையும், தமிழ்மொழியையும் ஓரளவு கற்றுத்தேர்ந்த தமிழர்களில் **பெரும்பாலானவர்கள்** தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும், பண்பாட்டுக்கும், நாகரீகத்திற்கும் பகைவர்களாக, விரோதிகளாக, துரோகிகளாக, எதிரிகளாக மாறிவிடுகிறார்கள், மாறி விடுகிறார்கள், மாறி விடுகிறார்கள் என்பதுதான் உண்மை. எனவேதான், தமிழர்களில் அந்நிய மொழியைக் கற்பவர்களின் தொகை மிகமிகக் குறைந்ததாகவும் அல்லது குறுகியதாகவுமே இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்படுகிறது. அதாவது, அந்நிய மொழியைக் கற்கும் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அந்நிய மொழிக்கும், மொழியினர்களுக்கும் நன்றியும், உண்மையுமுள்ள அடிமைகளாக மாறி விடுகிறார்கள், மாறிவிடுகிறார்கள், மாறிவிடுகிறார்கள். எனவேதான், எத்தகைய இழப்புக்களையும் ஈடுகட்டி, எவ்வளவு பெரிய விலையையும் உடனே கொடுத்து தமிழ்நாட்டிலுள்ள கல்வித் துறையை தமிழ்மொழி வழிப்பட்டதாக்க வேண்டும். எதையுமே எவருமே அந்நிய மொழியில் கற்கக் கூடாது என்று தடைச்சட்டம் போட்டாக வேண்டும். இதற்காக அந்நியமொழியிலுள்ள அனைத்துவகையான கலைச் சொற்களையும் மொழியாக்கம் செய்தாக வேண்டும். [The Transliteration must be done and not Translation.] அப்பொழுதுதான் அந்நிய நாடுகளுக்கு மேற்படிப்பிற்காக செல்லுபவர்களுக்குப் பேருதவியாக இருக்கும். மேலும், எந்தத் தொழிற் கல்வி கற்பவர்களானாலும் சரி, அல்லது எந்த அறிவியல் கல்வி கற்பவர்களானாலும் சரி, தமிழ்மொழி வரலாறு, தமிழிலக்கிய வரலாறு, தமிழ் இலக்கிய அறிவு, தமிழினச் சமுதாய வரலாறு, சமய வரலாறு, அரசியல் வரலாறு முதலியவைகளை முதலாண்டு முதல் இறுதியாண்டு வரை முதல் பாடமாகப் படிக்க வேண்டும். அதாவது, அன்றாடம் குறைந்தது இரண்டு மணி நேரமாவது தமிழ்ப் பாடவகுப்பு எல்லா மாணவர்களுக்கும் இருக்க வேண்டும். எல்லாத் தொழிற் படிப்பினரும், அறிவியல் படிப்பினரும் ஆண்டுதோறும் கட்டாயமாகத் தமிழ்ப்பாடம் படித்துத் தேர்ச்சி பெற வேண்டும். இது சட்டமாக்கப் பட்டால்தான் தமிழ் அறிவும், தமிழ் உணர்வும் பரவலாகப் படித்த மக்களிடமும் வளர்ந்திடும், வளர்ந்திடும், வளர்ந்திடும். அப்படித் தமிழுணர்வும், தமிழறிவும் கல்வித் துறையின் இருகண்ணெனப் பேணப்பட்டிட்டால்தான் தமிழர்களுக்குத் தன்மான உணர்வு, இனமான உணர்வு, மொழிவிடுதலை உணர்வு, இனவிடுதலை உணர்வு, பண்பாட்டு விடுதலை உணர்வு, நாகரீக விடுதலை உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, சுயமரியாதை உணர்வு, இனப்பற்றுணர்வு, இன ஒற்றுமையுணர்வு, இன ஒருமைப்பாட்டுணர்வு முதலியவை விழிச்சி பெறும், எழிச்சி பெறும், செழிச்சி பெறும்.

## VII

தமிழின் எதிரிகளான அந்நியர்களைப் பற்றி மட்டும் சிந்திக்காமல் தமிழின் பகைவர்களான துரோகிகளையும், விரோதிகளையும் பற்றியும் சிந்தித்தாக வேண்டும். அதற்காகச் சங்கப் புலவர்களையும், நாயன்மார்களையும், ஆழ்வார்களையும், பெருங்காப்பிய புலவர்களையும், சிறுகாப்பிய புலவர்களையும் ... மக்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். அதாவது, நாம் நமது இலக்கியங்களையும், இலக்கியக் கலைஞர்களையும், இலக்கிய நாயகர்களையும், இலக்கியக் காவலர்களையும் பெருவாரியான பொதுமக்களின் நெஞ்சிலும், சிந்தையிலும் நிலைபேறு பெறச் செய்ய வேண்டும். அல்லது நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தமிழர்களின் வாழ்வியலில் தமிழ் மணம் கமழும், கமழும், கமழும். இல்லையேல் தமிழர்களின் வாழ்வியலில் பிண நாற்றமே வீசும், வீசும், வீசும்.

***[சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்த நகல்]***

பதினெண்சித்தர்களே பலவகைச் சித்தர்களைப் பயந்தளித்தனர்
பதினெண்சித்தர்களே பார் முழுவதும் சமயநெறியால்
தனிமனிதர், குடும்பம், சமுதாயம், அரசியலாவன வடித்தனர்.
பதினெண்சித்தர்களே ஆகமம், மீமாம்சை, நிடதம், துணைநிடதம்
ஈன்றனர்

பதினெண்சித்தர்களே செப்புமொழி செய்தனர்
பதினெண்சித்தர்களே கலைகள் ஞானங்கள் கண்டனர்
பதினெண்சித்தர்களே தத்துவங்கள் சித்துக்கள் ஈன்றனர்.
பதினெண்சித்தர்களே ஊழ்வினை, விதிகள் வெல்ல வழியமைத்தனர்
பதினெண்சித்தர்களே இதிகாச புராணமென இலக்கியங்கள்
தோற்றுவித்தனர்

பதினெண்சித்தர்களே அனாதியினர் ஆதியினர் பாதியினர்
மீதியினர்

- **'எந்த மானுடம் இந்த மானுடம்' கவிதைத் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது.**

"... தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டியவரும், பிற்காலச் சோழப்பேரரசைத் தோற்றுவித்தவரும் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியுமான குருமகாசன்னிதானம் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் பெருமுயற்சியில் கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய 500 ஆண்டுக்கால இடைவெளியில் தமிழகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டிட்ட பிற்காலச் சோழப்பேரரசு உருவாயிற்று. இப்பேரரசே சங்க காலத்துக்குப் பிறகு தமிழ்மொழி தழைக்க, தமிழர் சமயம் தழைக்க, தமிழர் நாகரீகமும், பண்பாடும் தழைக்க உலகளாவிய பெருமுயற்சியினை செயலாக்கிற்று. பிற்காலச் சோழப்பேரரசின் அரச பரம்பரையின் முழுமையான சமயப்பற்றுதான் சிற்பங்கள் நிறைந்த கோயில்களைக் கலைக் கருவூலங்களாக்கின. திவ்வியப் பிரபந்தங்களையும், திருமுறைகளையும் தொகுக்கச் செய்தன. சாத்திரங்களும், புராணங்களும், பரணிகளும், உலாக்களும், காப்பியங்களும் வானோக்கி வளரச் செய்தன. உலக வரலாற்றில் எந்த ஒரு பேரரசும் செய்ய முடியாத இலக்கிய மறுமலர்ச்சி, கலை மறுமலர்ச்சி, சமய மறுமலர்ச்சி, சமுதாய மறுமலர்ச்சி, அறிவியல் மறுமலர்ச்சி முதலிய பல துறை மறுமலர்ச்சிகளை உருவாக்கிய பேரரசினை உருவாக்கியவர் வரலாற்றைக் கருவாகக் கொண்ட முயற்சியே நமது முயற்சி. ..."

***[1978இல் சித்தரடியான் கு.சத்தியமூர்த்தி அவர்களுக்கு குருதேவர் எழுதிய அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்டது]***

